**கவனிக்க.**-2024.03.07 ஆந் திகதிய இல.2375 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2376 - 2024 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2024.03.15

*2376 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 34 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 36 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**-பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் 2024, மாச்சு மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 22ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

33 - B 082549- 353 (2024/03)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை

## மாவட்ட நீதிமன்றம், கொழும்பு

கொழும்பு -03, காலி வீதி, இல. 450 எனும் முகவரியில் நிரந்தர அலுவலகத்தையும் மற்றும் பிரதான அலுவலகம் அமைந்துள்ள மாலபே, அத்துருகிரிய பாதை, இல. 410/2, எனும் முகவரியில் “மாலபே கிளை” அலுவலகத்தையும் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ. ( Psn Asia Bsnking Corporation PLC) .

வழக்கு இலக்கம்: DMB 00125/16
பெறுமதி: ரூபா 4,482, 938/64
தன்மை: ஈடு
செயல்முறை: முறையானது

வழக்காளி

எதிராக

01. D.N.A. எக்ஸசரீஸ் லங்கா தனியார் கம்பனி,
( D.N.G Accessories Lanka ( Private) Limited
இல.479, புல்லர்ஸ் வீதி, கொழும்பு -08.

மற்றும்
இல. 7/1, சார்மன்ட் பாதை, கொழும்பு 06.

2. குனன்கே கயாசந்திர விஜேருவன்,
இல. 3/49, வில்மட் A பெரேரா மாவத்தை,
ஹொரன.

எதிராளிகள்

2019, யூலை 11 ஆந் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் வழக்காளிக்கு, மேல் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் வசதிகளின் மீது ரூபாய் நான்கு மில்லியன் நான்கு இலட்சத்து எண்பத்தியிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தெட்டு ரூபா அறுபத்திநான்கு சதம் (ரூபா 4,482,938.64)பணத்தொகை மற்றும் ரூபா 4,410, 633.19 பணத்தொகைக்கு 2016.01.26 ஆந் திகதியிலிருந்து 24% வருடாந்த வட்டியுடன் வழக்காளிக்கு சேரவேண்டியுள்ளதுடன்,

ரூபாய் நான்கு மில்லியன் நான்கு இலட்சத்து எண்பத்தியிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தெட்டு ரூபா அறுபத்திநான்கு சதம் ( ரூபா 4,482, 938.64) பணத்தொகை மற்றும் ரூபா 4,410, 633.19 பணத்தொகைக்கு 2016.01.26 ஆந் திகதியிலிருந்து 24% வருடாந்த வட்டியுடன் சேர்த்து அறவிடுவதற்கு என்னால் தடை செய்யப்பட்ட இல. 75 எனும் ஈட்டுமுறியின் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.

2024.04.30 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு என்னால் தடைசெய்யப்பட்ட வேவல -615E கிராம அலுவலர் பிரிவு, வேவல கிராமத்தில் அமைந்துள்ள “மொரகஹலந்த” என்று அறியப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனமானது பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### மேல் குறிப்பிடப்பட்ட ஆதனத்தின் அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ஹொரன பதிவுப் பிரிவிற்குட்பட்ட , ரைகம் கோரளை, கும்புக்கே பத்துவ, ஹொரன நகர சபை எல்லைக்குட்பட்ட, ஹொரன பிரதேச செயலாளர் பிரிவு, வேவல - 615E கிராம அலுவலர் பிரிவு, வேவல கிராமத்தில் அமைந்துள்ள “மொரகஹலந்த” எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் S. வித்தாரனகே அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2009.08.23 ஆந் திகதிய வரைபட இல. 4280 இல் விபரிக்கப்பட்டுள்ள (உரிமம் பெற்ற நில அளவையாளர் V.A.L. சேனாரத்ன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1996.08.22 ஆந் திகதிய வரைபட இல. 3440B இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 02 இன் மீளளவையாகும்.) காணித்துண்டு 02 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: வேவலையிலிருந்து முனகம வரையான பிரதான பாதை; கிழக்கு: வரைபட இல. 3440 B இன் காணித்துண்டு 3; தெற்கு: வரைபட இல. 3440B இல் விபரிக்கப்பட்டுள்ள இக்காணியின் காணித்துண்டு R1 ( பாதைக்கான ஒதுக்கீடு) மற்றும் மேற்கு: வரைபட இல. 3440 B இன் காணித்துண்டு 1 மற்றும் இவ் எல்லைக்குள் அடங்கும் இக்காணியானது இருபது தசம் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.20.5பே.) விஸ்தீரணத்தையும் மற்றும் அதனுள்ளடங்கும் வில்மட் பெரேரா மாவத்தை, இல. 49/2 எனும் வரிப்பண இலக்கத்தைக் கொண்ட கட்டிடம், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இக்காணியானது ஹொரன காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் A 157/ 108 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிடப்பட்ட காணித்துண்டு 2 இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ஹொரன பதிவுப் பிரிவிற்குட்பட்ட , ரைகம் கோரளை, கும்புக்கே பத்துவ, ஹொரன நகர சபை எல்லைக்குட்பட்ட, வேவல கிராமத்தில் அமைந்துள்ள "மொரகஹலந்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் V.A.L. சேனாரத்ன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1996.08.22 ஆந் திகதிய வரைபட இல. 3440B இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 02 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: வேவலையிலிருந்து முனகம வரையான பிரதான பாதை; கிழக்கு: வரைபடத்தின் காணித்துண்டு 3; தெற்கு: காணித்துண்டு R.1 (பாதைக்கான ஒதுக்கீடு) மற்றும் மேற்கு: வரைபடத்தின் காணித்துண்டு 1 மற்றும் இவ் எல்லைக்குள் அடங்கும் இக்காணியானது இருபது தசம் ஐந்து பேர்ச் (0ஏ.0றூ.20.5பே.) விஸ்தீரணத்தையும் மற்றும் அதனுள்ளடங்கும் வில்மட் பெரேரா மாவத்தை, இல. 49/ 2 எனும் வரிப்பண இலக்கத்தைக் கொண்ட கட்டிடம், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இக்காணியானது ஹொரன காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் C 309/ 116 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் காணிப்பகுதியில் மற்றும் அதன் வழியாக செல்லும் பாதை உரிமையை கொண்டுள்ளது.

1. மேற்குறிப்பிட்ட வேவல கிராமத்தில் அமைந்துள்ள "மொரகஹலந்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் V.A.L. சேனாரத்ன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1996.08.22 ஆந் திகதிய வரைபட இல. 3440 B இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு R1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: காணித்துண்டு 2 இல் இருந்து 4 வரை; கிழக்கு: காணித்துண்டு 5; தெற்கு: காணித்துண்டு 6 இல் இருந்து 9 வரை மற்றும் மேற்கு: காணித்துண்டு 1 மற்றும் இவ் எல்லைக்குள்ளடங்கும் மேற்குறிப்பிடப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் இக்காணியானது இரண்டு றூட் பதினாறு தசம் இரண்டு பேர்ச் (0ஏ.02றூ. 16.2பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன் இக்காணியானது ஹொரண காணிப் பதிவகத்தில் C 99/326 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிடப்பட்ட வேவல கிராமத்தில் அமைந்துள்ள "மொரகஹலந்த " எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் V.A.L. சேனாரத்ன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1996.08.22 ஆந் திகதிய வரைபட இல. 3440B இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு R2 ( 20 அடி அகல பாதை ஒதுக்கீடு) என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: காணித்துண்டு 1; கிழக்கு: காணித்துண்டு 8; தெற்கு: காணித்துண்டு R3 மற்றும் மேற்கு: காணித்துண்டு 9 மற்றும் இவ் எல்லைக்குள்ளடங்கும் இக்காணியானது மேற்குறிப்பிடப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் ஆறு தசம் இரண்டு பேர்ச் (00ஏ.0றூ.6.2பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன் இக்காணியானது ஹொரன காணிப்பதிவகத்தில் C 99/327 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிடப்பட்ட வேவல கிராமத்தில் அமைந்துள்ள "மொரகஹலந்த " எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் V.A.L. சேனாரத்ன அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1996.08.22 ஆந் திகதிய வரைபட இல. 3440B இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு R3 ( 20 அடி அகல பாதை ஒதுக்கீடு) என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: காணித்துண்டு 6 இல் இருந்து 9 வரை, காணித்துண்டு R2 மற்றும் 4955 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 2; கிழக்கு: 4955 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 2; தெற்கு: காணித்துண்டு 13 , R4, காணித்துண்டு 12, R7 காணித்துண்டு 11, காணித்துண்டு 10 மற்றும் R9 மற்றும் மேற்கு: பாதை மற்றும் இவ் எல்லைக்குள்ளடங்கும் இக்காணியானது இருபத்து மூன்று தசம் எட்டு பேர்ச் (00ஏ.0றூ.23.8பே.) விஸ்தீரணத்தை கொண்டுள்ளதுடன் இக்காணியானது ஹொரன காணிப்பதிவகத்தில் C 113/263 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவாளர்,<br>
பதில் பிசுக்கால்.<br>
மாவட்ட நீதிமன்றம், ஹொரனை.

பதிவாளர்,<br>
பதில் பிசுக்கால்/சமாதான நீதவான் , மாவட்ட நீதிமன்றம்,<br>
ஹொரனை.<br>
2024, பெப்புருவரி 21.

03- 303

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண வர்த்தக நீதிமன்றத்தின் ( கொழும்பில் உள்ள) அதன் குடியியல் அதிகாரத்தை நியாயாதிக்கத்தைக் கொண்ட

வழக்கு இலக்கம்: CHC/ 14/ 2024/CO
இயல்பு: வைன் டிங் அப் (நிறுவனம் )
[ஒடுக்குதல்]

மாத்தளை, வரக்காமுர, வரகந்த தோட்டம், 07 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட MAAM BISCUITS LANKA (PRIVATE) LIMITED (PV 95313) இன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ( திருத்தப்பட்ட ) சட்டத்தின் பிரிவு 270 இன்கீழ் மற்றும் அதன் அடிப்படையில் நீதிமன்றத்தால் முடிவடைவதற்கான விண்ணப்பம் விடயத்தில்,

Manchester Foods ( Private) Limited ( மன்செஸ்டர் ஃபுட்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்), இல. 179/1, வத்தேகம வீதி, உக்குவெல.

*மனுதாரர்*

கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தினால் மேற்கூறிய பெயரிடப்பட்ட நிறுவனத்தை முடக்குவதற்கான மனு 2024, பெப்புருவரி 15 ஆந் திகதி இல. 179/1, வத்தேகம வீதி, உக்குவெல மன்செஸ்டர் ஃபுட்ஸ் ( பிரைவேட்) லிமிடட்டால் மேற்படி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றோம். வத்தேகம வீதி, உக்குவெல, மேலும் அந்த மனு 2024 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மற்றும் அந்த நிறுவனத்தின் எந்தவொரு கடனாளி அல்லது பங்களிப்பாளரும் (contributory), மேற்படி மனு மீதான கட்டளையை ( order) ஆதரிப்பதற்கோ அல்லது எதிர்க்க விரும்புவோர், விசாரணையின் போது தனிப்பட்ட ரீதியான அல்லது அந்த புறநிலைக்காக அவரது வழக்கறிஞர் அல்லது சட்டத்தரணி மூலம் ஆஜராகலாம். மேலும் மனுவின் பரதி, அதற்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தினால் அந்த நிறுவனத்தின் எந்தக் கடனாளி அல்லது பங்களிப்பாளருக்கும் கீழே கையொப்பமிடுபவரால் அளிக்கப்படும்.

துஷாரா சமன்பாலி அமரசிறி,
இல.58/2B, 3 ஆவது லேன்,
சோம தலகல மாவத்தை,
கங்கொடவில, நுகேகொட.

**குறிப்பு**: மேற்படி மனுவின் விசாரணைக்கு ஆஜராக விரும்புகின்ற எவரேனும் மேற்படி துஷாரா சமன்பாலி அமரசிறிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அறிவிப்பில் நபரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும் அல்லது ஒரு நிறுவனம் என்றால், நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும். மேலும் அந்த நபர் அல்லது நிறுவனம் அல்லது அவரது அல்லது அவர்களின், சட்டத்தரணி (ஏதேனும் இருந்தால்) கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட வேண்டும் அல்லது தபால் மூலம் அனுப்ப விரும்பினால், 2024 ஆம் ஆண்டு மே மாதம் (May) 09 ஆந் திகதி மாலை 6.00 மணிக்கு மேல் மேலே குறிப்பிடப்பட்டுள்ளதை அடைய போதுமான நேரத்தில் அஞ்சல் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

துஷாரா சமன்பாலி அமரசிறி,
இல.58/2B, 3 ஆவது லேன்,
சோம தலகல மாவத்தை,
கங்கொடவில,
நுகேகொட.

2024.03.06.

03- 270

**மேல் மாகாண மேல் நீதிமன்றம்**
**கொழும்பு அமர்வு**
**(குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்)**

இல. 199, கிவ் வீதி, (Kew Road) கொழும்பு 02 இன் CR.OPWIZ ( PRIVATE) LIMITED விடயம் தொடர்பாக,

வழக்கு இல.: HC/ civil/16/ 2024/CO
தன்மை : ஒடுக்குதல் (Winding up)
நடவடிக்கை : சுருக்கமுறை
பெறுமதி: ரூபா 38,545,548

ஒடுக்கப்படக் கோரும் கம்பனி

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இன் கீழாக நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்கப்படுதற்கான விண்ணப்பம்

C.I.C. AGRI BUSINESS ( PRIVATE) LIMITED
3 ஆம் மாடி, இல. 199, கிவ் வீதி, கொழும்பு -02.

மனுதாரர்.

இத்தால் அறிவிக்கப்படுவது யாதெனில், கொழும்பு குடியியல் மேல் நீதிமன்றத்தால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியானது ஒடுக்கப்படுவதற்கான மனுவொன்று கொழும்பு -02, கிவ் வீதி, இல. 199, 3ஆம் மாடி ஐச் சேர்ந்த சி.ஐ.சி. அக்ரி பிஸ்னஸ் (பிரைவேட்) லிமிடெட் கம்பனி ( C.I.C. AGRI BUSINESS (PRIVATE) LIMITED இனால் 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதியன்று குறித்த நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த மனுவானது 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதியன்று நீதிமன்றில் கேட்கப்படுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளது என்பதோடு குறித்த மனு தொடர்பாக ஆக்கப்படும் கட்டளைக்கு ஆதரவு அல்லது எதிர்ப்பு தெரிவிக்க விரும்பும் குறித்த கம்பனியினது கடன்கொடுனர் அல்லது பங்குதாரர்கள் கேட்பின் போது தாமாகவோ அல்லது அந்நோக்கத்திற்காக அவரது சட்டவரைஞர் அல்லது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலம் தோன்றலாம் என்பதுடன் யாதேனும் கடன்கொடுநர் அல்லது குறித்த கம்பனியின் பங்குதாரரினால் தேவைப்படுத்தப்படும்போது மனுவின் பிரதியொன்று அதன்கெனக் குறித்துரைக்கப்பட்ட கொடுமதியைச் செலுத்துவதன் மீது, கீழே கையொப்பமிட்டருப்பவரினால் வழங்கப்படும்.

M/s போல் ரத்னாயக்க அசோசியேட்ஸ்
(Paul Ratnayake Associates),
சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள் மற்றும் சொலிசிற்றர்கள்,
இல. 59, கிறெகரி வீதி,
(Gregory' s Road), கொழும்பு -07.

**குறிப்பு**: குறித்த மனுவினது கேட்பில் தோன்றும் நோக்கமுடைய யாரேனும் நபர் மேலே பெயர்குறிப்பிடப்பட்ட போல் ரத்னாயக்க அசோசியேட்ஸ் சட்டத்தரணிகள் (Paul Ratnayake Associates,Attorneys - at- Law) இற்கு அவ்வாறு செய்வதற்கான அவரது எண்ணத்தினை எழுத்து மூலமான அறிவித்தலை சேர்ப்பிக்க வேண்டும் அல்லது தபாலில் அனுப்புதல் வேண்டும். 1939 ஆம் ஆண்டின் கம்பனிகள் ஒடுக்கப்படல் விதிகளுடைய படிவம் 9 இல் குறித்துரைக்கப்பட்டதற்கமைவான அறிவித்தலானது, நபரினுடைய பெயர் மற்றும் முகவரி அல்லது ஒரு நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நபரினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரின் அல்லது அவர்களின் சட்டத்தரணியால் ( யாரேனும் காணப்படின் ) கையொப்பமிடப்பட வேண்டும் மற்றும் கடன்கொடுனராயின் கடன் நிலுவைத் தொகை மற்றும் பங்கதாரராயின் வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த அறிவித்தலானது சேர்க்கப்படும்போதோ அல்லது தபாலில் அனுப்பப்படும்போது வழமையான தபால் அனுப்பப்படும்போது 2024 ஆம் ஆண்டு மாச்சு 27 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

போல் ரத்னாயக்க அசோசியேட்ஸ்
(Paul Ratnayake Associates),
மனுதாரருக்கான பதிவுபெற்ற
சட்டத்தரணிகள்.

03- 339

**பேராசிரியர் ஆசு மாரசிங்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "பேராசிரியர் ஆசு மாரசிங்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தை கூட்டிணைப்பதே சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) வலது குறைந்தோர், ஏழைகள் உட்பட சமூகத்தில் ஓரம் கட்டப்பட்டுள்ள மக்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை சுய முயற்சியில் முன்னேற பலப்படுத்தல்;

(ஆ) கல்வி , மத, கலாச்சார, அழகியற்கலை மற்றும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் நிகழ்ச்சிகள், போட்டிகளை ஒழுங்கு செய்தல், மற்றும்;

(இ) பொருளாதார வசதி குறைபாடுள்ள குடும்ப சிறார்களின் பாடசாலை மட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் வரையான கல்வி நடவடிக்கைகளில் உதவி செய்தல்,

பிறவும்.

சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த ,
பாராளுமன்ற உறுப்பினர்.

03- 268

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.